# திருவரங்கத்தமுதனார்
# அருளிச் செய்த ப்ரபந்ந காயத்ரி என்னும்
# இராமானுச நூற்றந்தாதி




**பாசுரம்-9**

**இறைவனைக்காணும் இதயத்திருள்கெட* ஞானமென்னும்**
**நிறைவிளக்கேற்றிய பூதத்திருவடிதாள்கள்*நெஞ்சத்து**
**உறையவைத்தாளுமிராமானுசன் புகழோதும் நல்லோர்**
**மறையினைக் காத்து* இந்த மண்ணகத்தே மன்ன வைப்பவரே.**



**பாசுரக் கருத்து**

“பூத்தாழ்வார் திருவடிகளைத் தம் திருவுள்ளத்திலே வைத்து அநுபவிக்கும் எம்பெருமானாரின் கல்யான குணங்களைச் சொல்லுமவர்கள், வேதத்தை காப்பாற்றுபவர்கள் என்கிறார்.

**பதவுரை**

ஞானம் என்னும் நிறைவிளக்கேற்றிய: நிறை விளக்கு என்பதற்கு நிறை ஞானம் அதாவது பரஞானம் என்பதாகும்.

**பாசுர அர்த்தம்**

சேஷியான எம்பெருமானை, காண்பதற்கு கருவியான, நெஞ்சத்தின் கண் உள்ள அறியாமையென்னும் இருள் ஒழியும்படி, ஞானம் என்னும் நிறைவுற்ற விளக்கு எரிந்து ஒளிரும்படி, இரண்டாம் திருவந்தாதியை அருளிச்செய்த பூதத்தாழ்வாருடைய திருவடிகளை, தமது திருவுள்ளத்திலே, சாச்வதமாக ஸ்தாபித்து அநுபவிக்கிற எம்பெருமானாருடைய கல்யாண குணங்களை இடைவிடாது சொல்லிக் கொண்டிருக்கும் நல்லவர்கள்,

வேதத்தை ரக்ஷித்து, இந்த நிலவுலகில் நிலைநிறுத்துபவர்கள் ஆவார்கள்.

## பாசுரம்-10



பேயாழ்வார்

மன்னிய பேரிருள் மாண்டபின்* கோவலுள் மாமலராள்
தன்னொடுமாயனைக் கண்டமைகாட்டும்* தமிழ்த்தலைவன்
பொன்னடி போற்றுமிராமானுசற்கு அன்பு பூண்டவர்தாள்
சென்னியில் சூடும்* திருவுடையார் என்றும் சீரியரே.

### பாசுரக் கருத்து

“பொய்கையாழ்வாரும் பூத்தாழ்வாரும் விளக்கேற்ற, இருள் நீங்கியதும்,பேயாழ்வார் தாம் கண்ட இறைக் காட்சியினைத் தாம் அருளிய மூன்றாம் திருவந்தாதி மூலமாக காட்டும் வள்ளன்மைக்காக, அவர் திருவடிகளைப் போற்றும் எம்பெருமானாரிடத்தே அன்புவுடையவர்களின் திருவடிகளைத் தலையில் சூடும் திருவாளர்கள், எல்லாக்காலத்திலும் சிறப்புடையோர் ஆவார்.

## பதவுரை

கோவலுள் மாமலராள் கண்டமைக் காட்டும்: திருக்கோவலூரில் முதலாழ்வாராகிய இம்மூவரும், சிறியதோர் இடைகழியில் மழைக்காக ஒரு நாளிரவில்

நெருங்கி நிற்கும் போது, எம்பெருமான் தானும் பிராட்டியுமாக வந்து, இவர்களை நெருங்கி உராய்ந்து பேரின்பமெய்தி மெய்மறந்து நிற்க ,
பொய்கையாழ்வரும், பூத்தாழ்வாரும் விளக்கேற்ற, இருள் நீங்கியதும் பேயாழ்வார் தாம்கண்டு மகிழ்ந்த காட்சியை
"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்று தொடங்கும் தாம் அருளிய மூன்றாம் திருவந்தாதி என்னும் திவ்ய பிரபந்தத்தால் காட்டுகிறார்.

**பாசுர அர்த்தம்**

அறியாமையென்னும் பெரிய இருளானது, முற்பட்ட ஆழ்வார்கள் இருவரும் ஏற்றின திருவிளக்காலே நீங்கின பின்பு,திருக்கோவலூரில், ஆயனாரை பிராட்டியோடு கூட, தாம் சேவித்தபடியை, திருக்கண்டேன் என்று தொடங்கும் பிரபந்த முகத்தாலே வெளியிட்டருளி, தமிழுக்குத் தலைவரான பேயாழ்வாருடைய பொன்போல் விரும்பதக்க திருவடிகளை புகழுமியல்வரான எம்பெருமானார் திறத்தில்,பக்தியையுடைவர்களினது திருவடிகளை தலையில் சூட்டிக் கொள்ளும் செல்வம் படைத்தவர்கள் எப்பொழுதும் சிறப்புடையோர் ஆவர்.

**பாசுரம்-11**



திருப்பாணாழ்வார்

சீரிய நான்மறைச் செம்பொருள்* செந்தமிழாலளித்த
பாரியலும் புகழ்ப்பாண்பெருமாள் * சரணாம்பதுமத்
தாரியல் சென்னியிராமானுசன் தன்னைச் சார்ந்தவர்தம்
காரியவண்மை* என்னாற் சொல்லொணாது இக்கடலிடத்தே.

**பாசுரக் கருத்து**

திருப்பாணாழ்வாருடைய திருவடிகளைத் தலையால் தாங்கும் எம்பெருமானாரைச் சார்வாக கொண்டவர்களுடைய, அநுஷ்ட்டாநத்தின் சிறப்பு இவ்வுலகில் என்னால் சொல்லி தலைக்கட்டவொண்ணாது என்கிறார்.

**பதவுரை**

சீரிய நான்மறைச் செம்பொருள்:
ரஹஸ்யத்ரயத்தை எடுத்து விரித்துரைத்தார் அமலானாதிபிரான் என்னும் பிரபந்தத்தில்.

பார் இயலும் புகழ்:
இயலுதல்: நடத்தல்; அதாவது புகழ் பூமியில் பரவுதல். அரும்பாடுபட்டுக் காண வேண்டிய வேதத்தின் செம்பொருளை எல்லோருக்கும் புரியும்படி சுருக்கமாகச் செந்தமிழினால் அளித்தமைப் பற்றி இப்புகழ் பாரினில் இயல்கின்றது.
அமலானாதிபிரான் என்கிற முதல் பாசுரத்திலேயே, ஆதி என்று காரணமான பரமாத்ம ஸ்வரூபமும், விண்ணவர்கோன் - நித்யசூரிகள் சேவிக்கும் பரரூபமும், வேங்கடவன் , அரங்கத்தம்மான் -அர்ச்சாரூபமும், அமலன், நிமலன் - ஹேயப்ரத்யநீகத்வம் முதலிய குணங்களும், கமலபாதம் - திருமேனிக்கே உரிய அழகு, மென்மை, குளிர்ச்சி முதலிய குணங்களும் நீதி வானவன் - பரமபதமாகிய நித்ய விபூதிச்செல்வமும், அடியார்க்கு என்னை ஆட்படுத்த என்பதனால் லீலா விபூதியென்னும் இவ்வுலகச் செல்வமும் சொல்லப்பட்டுள்ளது.

## பாசுர அர்த்தம்

சிறப்பு வாய்ந்த நான்கு வகைப் பட்ட வேதத்தினுடைய நேரிய பொருளை, திருப்பாணாழ்வார்,செவ்விய தமிழ் நூலினாலே அருளி, புகழ் பெற்றார். எம்பெருமானார், இவ்வாழ்வாரின் திருவடித் தாமரைகளைத் தம் தலையில் சூடினார். இந்த இராமானுசரைச் சார்ந்து, அடிமைப்பட்டோரின் ஒழுக்கத்தின்  மேன்மையை, கடல் சூழ்ந்த இவ்வுலகில்,அடியேனால் விவரித்து தலைக் கட்ட முடியாது.

## பாசுரம்-12



அவதாரஸ்தலமான திருமழிசையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ திருமழிசை ஆழ்வார்.

இடங்கொண்ட கீர்த்தி மழிசைக்கிறைவன்* இணையடிப்போது
அடங்கு மிதயத்திராமானுசன்* அம்பொற்பாதமென்றும்
கடங்கொண் டிறைஞ்சும் திருமுனிவர்க்கன்றிக் காதல் செய்யாத்
திடங்கொண்ட ஞானியர்க்கே அடியேன் அன்பு செய்ததுவே.

**பாசுரக் கருத்து**

திருமழிசைப்பிரான் திருவடிகளுக்கு உறைவிடமான திருவுள்ளத்தை உடைய எம்பெருமானாரைப் பற்றும் திருவாளரையொழிய, மற்றவரை விரும்பாத,

உறுதிப்பாடு வாய்ந்த ஞானியரையே தாம் விரும்புவதாக கூறுகிறார்.

**பதவுரை**

**திடங்கொண்ட ஞானியர்க்கே:**
உடையவர் திருவடியே உய்வதற்கு வழி என்று இருப்பவர்.

**பாசுர அர்த்தம்**

உலகமங்கும் பரவிய புகழ் படைத்த, திருமழிசைக்குத் தலைவரான திருமழிசை பிரானுடைய பாதாரவிந்தங்கள், குடிகொண்டிருக்கப் பெற்ற, திருவுள்ளத்தையுடையவரான, எம்பெருமானுருடைய மிகவும் அழகிய திருவடிகளை, எக்காலத்திலும், இதுவே நமக்கு ஸ்வரூபமென்கிற புத்தியோடே ஆச்ரயிக்கையாகிற செல்வத்தையுடையரான மஹான்களுக்குத் தவிர, மற்றவர்களுக்கு அன்பு பூண்டிராத , மிக்க உறுதியையுடையரான ஞானிகளுக்குத் தான் அடியேன் பக்தனாயிருப்பேன்.

**பாசுரம்-13**



## தொண்டரடிப்பொடி ஆழ்வார்

செய்யும் பசுந்துளவத் தொழில்மாலையும்* செந்தமிழில்
பெய்யும் மறைத்தமிழ்மாலையும்* பேராத சீரரங்கத்து
ஐயன் கழற்கணியும் பரன் தாளன்றி ஆதரியா
மெய்யன்* இராமானுசன் சரணே கதி வேறெனக்கே.

**பாசுரக் கருத்து**

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளையொழிய மற்றொன்றில் ஆதரமற்றிருக்கும் எம்பெருமானார் திருவடிகளே நமக்குப் பிராப்யமென்கிறார்.

**பதவுரை**

பசுந்துளவ மாலை: எம்பெருமான் திருஅவயவத்துக்குத் தக்கவாறமைந்த திருத்துழாய் மாலையுடன் கூடையைத் தமக்கு அடையாளாமாக கொண்டிருப்பவர் இவ்வாழ்வார். ஏனையோர் மாலை தொடுக்கும் போது அவர் கைப்பட்டு திருத்துழாய் வாடி விடும். ஆனால் அரங்கனுக்கு அணிச் செய்ய திருத்துழாய் வடிவத்தில் நித்யசூரியே வந்திருப்பதால், தனக்கு தொண்டுப்பட்ட ஆழ்வாருடைய திருக்கரம் பட்டதும் புத்துணர்ச்சி ஏற்பட்டுப் புதுக்கணிப்பு உண்டாகி, அது பசுமை நிறத்தாலே வெளிப்படுகிறது தோன்ற "பசுந்துளபமாலை" என்கிறார்.

**பாசுர அர்த்தம்**

தொண்டரடிப்பொடியாழ்வாராகிய தம்மாலே செய்யப்பட்டதாய், பசுமை தங்கிய திருத்துழாய் மயமாய், வேலைபாடுகளையுடைத்தான பூமாலைகளையும், செம்மையான தமிழ் மொழியில் செய்யப்படும் வேதமான திருமாலை, திருப்பள்ளியெழுச்சி என்கிற திவ்யப்ரபந்தகளாகிய சொல் மாலைகளையும், நித்ய ஸித்தமான கல்யாண குணங்களையுடையவரான ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகளிலே சாத்தினவருமான தொண்டரடிப்பொடியாழ்வருடைய திருவடிகளைத் தவிர, மற்றொன்றையும் விரும்பாத, ஸத்ய சீலரான எம்பெருமானருடைய திருவடிகளே, அடியேனுக்கு விலக்ஷணமான ப்ராப்ய வஸ்துவாம்.

---